அரசாங்கம் வெளியிடவிருக்கும் கீழ்க்கண்ட வரைவு அறிவிப்புக்கு மேற்படிச் சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்பட வேண்டும்.

வரைவு அறிவிப்பு

1968-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25-ம் நாளிட்ட தமிழ்நாடு அரசாங்க இதழில் 1-ம் பக்கத்தின் விதிகள் பிற்சேர்க்கையின் 899–902-ம் பக்கங்களில் வெளியிடப்பட்ட, 1968-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8-ம் நாளிட்ட S.R.O.—A 769/1968-ம் எண் அறிவிப்பின் தோற்றுவாயில் கீழ்க்கண்ட திருத்தங்களைத் தமிழ்நாடு ஆளுநர் இதனால் செய்கிறார். பருத்தி போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் III/1923) 7-வது பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு இத் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மேற்படிச் சட்டத்தில் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு சட்டமன்றத்தின் தீர்மானங்கள் மூலம் இவற்றிற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

திருத்தம்

மேற்கூறிய அறிவிப்பின் தோற்றுவாயில், கீழ்க்கண்ட பாராவைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்; அதாவது—

" 2. இதனால் செய்யப்படும் திருத்தங்கள் 1969-ம் ஆண்டு பிப்ரவரி 1-ம் நாள் முதல் செயலுக்கு வரும்."

இந்தத் தீர்மானத்தைப் பேரவை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(ஆ) தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (உபரி நிலங்களை முடிவு செய்தல்) விதிகளுக்குத் திருத்தம்

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I beg to move :

" That the following amendment to the Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965 published with Revenue Department Notification, S.R.O. No. A. 1240 of 1965, dated the 25th November 1965 at pages 1284-1296 of Part V of the *Fort St. George Gazette*, dated the 1st December 1965 which it is proposed to issue under sub-section (1) of section 94 of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Madras Act 58 of 1961) be approved by the Legislature under the proviso to the said sub-section.

AMENDMENT.

For sub-rule (3) of rule 6 of the said rules, the following sub-rule shall be substituted :

" (3) The value for the surplus land and for the buildings and trees thereon, if any, shall at the option of the assignee, be payable in a lumpsum or in equal annual instalments not exceeding twenty, with interest at the rate of five per centum per annum on the outstanding instalments.

[Thiru K. A. Mathialagan] [1969 பிப்ரவரி 28

Provided that the assignee shall be entitled to pay, at any time, any sum in excess of the annual instalments and such excess shall be adjusted towards the subsequent instalment or instalments.''

2. Rule 6 (3) of the Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965 provides that the value for the surplus land and for the buildings and trees thereon, if any, shall at the option of the assignee be payable in a lumpsum or in twenty equal annual instalments with interest at the rate of five per centum per annum on the outstanding instalments. The rule as it exists, does not contemplate the payment of land value in a lesser number of instalments and to the payment of the instalments in advance. It is therefore, proposed to substitute the new sub-rule 3 under rule 6 of the Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965 in the place of the existing one.

Sir, I request the House to accept the motion.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, நாளை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

8. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

ஏதும் இல்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS